# வணிகக்கல்வி

## 1.3 வணிகங்களை வகைப்படுத்தல்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

## வணிகங்களை வகைப்படுத்தும் நியதிகள்

வணிகங்களை பின்வரும் நியதிகளின் அடிப்படையில் வகைப்படுத்த முடியும்

1. உற்பத்தியின் தன்மையின் அடிப்படையில்
2. உரிமையின் அடிப்படையில்
3. நோக்கத்தின் அடிப்படையில்
4. பருமனின் அடிப்படையில்
5. உற்பத்தித் துறையின் அடிப்படையில் / தொழில் மூலத்திற்கேற்ப

**வணிகத்தின் வகைப்படுத்தலின் அடிப்படைகள்**

- உற்பத்தியின் தன்மை
  - முதலாம் நிலை
  - இரண்டாம் நிலை
  - மூன்றாம் நிலை
- உரிமை
  - தனியார் துறை
  - பொதுத்துறை
- நோக்கம்
  - இலாப நோக்கம்
  - இலாபநோக்கமற்ற
- பருமன்
  - சிறிய நடுத்தர அளவு
  - பாரிய அளவு
- உற்பத்தித்துறை
  - விவசாயம்
  - கைத்தொழில்
  - சேவை

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## உற்பத்தியின் தன்மை அடிப்படையில் வணிகங்களை வகைப்படுத்தல்




## முதல்நிலை வணிகம்/ முதல்நிலை உற்பத்தி / முதல்நிலை கைத்தொழில்

இயற்கையின் அருங்கொடையாகக் கிடைக்கப் பெற்றவைகளை எந்த வித மாற்றமுமின்றி அம்முறையிலேயே பயன்பாட்டுக்கு உட்படுத்தும் உற்பத்தி வணிகம் முதல்நிலை (ஆரம்ப) வணிகம் எனப்படும்.

முதல்நிலை வணிகத்தில் பொதுவாக பின்வரும் உற்பத்தி நடவடிக்கைகள் உள்ளடக்கப்படுகின்றன

1. விவசாயம், கால்நடை, காட்டுவளம், மீன்பிடித்தொழில்
2. சுரங்கமறுத்தலும், கனிய அகழ்வும்

இவை பொதுவாக இரண்டாம் நிலை உற்பத்திக்கான உள்ளீடுகளாக அமையும்.

## இரண்டாம் நிலை வணிகம் / இரண்டாம் நிலை உற்பத்தி / இரண்டாம் நிலைக்கைத்தொழில்

இயற்கையிலிருந்து பெறப்பட்ட வளங்களை உருமாற்றி புதிய பொருளை உற்பத்தி செய்தல் அல்லது இயற்கையில் பெறப்பட்ட வளங்களையும் ஒன்றனைத்து புதியதோர் பொருளை நிர்மானம் செய்யும் / உருவாக்கும் உற்பத்தி நடவடிக்கைகளை இது உள்ளடக்கும்.

இரண்டாம் நிலை உற்பத்தியில் பொதுவாக பின்வரும் உற்பத்தி நடவடிக்கைகள் உள்ளடக்கப்படுகின்றன

1. உற்பத்திக் கைத்தொழில்
2. நிர்மாணக் கைத்தொழில்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## மூன்றாம் நிலை வணிகம் / மூன்றாம் நிலை உற்பத்தி / மூன்றாம் நிலைக் கைத்தொழில்

வியாபாரத்தையும், வியாபாரத்திற்கு உதவும் துணைநிலைச் சேவைகளையும் உள்ளடக்கிய வணிகம் மூன்றாம் நிலை வணிகம் எனப்படும்.

மூன்றாம் நிலை வணிகத்திற்குள் பொதுவாக பின்வரும் நடவடிக்கைகள் உள்ளடக்கப்படுகின்றன

1. மின்சாரம், வாயு, வெப்பம் மற்றும் குளிருட்டல் வழங்கல்
2. நீர் சுத்திகரிப்பும் விநியோகமும்
3. மலமகற்றும் நடவடிக்கைகள், கழிவகற்றல் முகாமைத்துவமும் அப்பொருட்களை மீள் சுழற்சிப் பயன்பாட்டிற்குட்படுத்தலும்
4. வியாபாரம், போக்குவரத்துச்சேவை, விடுதி வசதி வழங்கல் உணவு குடிபானம் வழங்கல்
5. தகவல் தொடர்பாடல் நடவடிக்கைகள்
6. நிதி காப்புறுதி மற்றும் வீட்டுரிமையும் ஆதன வியாபாரமும்
7. தொழில் சார் சேவைகள் மற்றும் ஏனைய தனியார் சேவைகள்
8. அரச நிர்வாகம், தேசிய பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகம் பாதுகாப்புச் சேவை

Note

உற்பத்தியின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தும் போது சுரங்கமறுத்தலும் அகழ்வும் முதலாம் நிலைக்கு (ஆரம்ப பிரிவு) உரித்தாவதுடன் தொழில் மூலத்திற்கேற்ப (உற்பத்தித்துறை) வகைப்படுத்தும் போது சுரங்கமறுத்தலும். அகழ்வும் கைத்தொழில் துறைக்கு உரித்துடையதாகும்.

Note

உற்பத்தியின் தன்மைக்கேற்ப மின்சாரம், வாயு, நீர் குளிரூட்டல் நீர் சுத்திரிகரிப்பும் விநியோகமும் மலமகற்றல், கழிவகற்றல் முகாமைத்துவம் மற்றும் அப்பொருட்களை மீள் சுழற்சிக்குட்படுத்தல் என்பவை மூன்றாம் நிலை வணிகத்திற்கு உரித்தாவதுடன் தொழில் மூலத்திற்கேற்ப (உற்பத்தித்துறை) அவை கைத்தொழில் துறைக்குரியதாகும்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**வணிகம்**

- முதலாம் நிலை உற்பத்தி / வணிகம் / கைத்தொழில்
  - பண்ணை உற்பத்தி
  - மீன்பிடி உற்பத்தி
  - அகழ்வு உற்பத்தி
- இரண்டாம் நிலை உற்பத்தி / வணிகம் கைத்தொழில்
  - உற்பத்திக் கைத்தொழில்
  - நிர்மாணக் கைத்தொழில்
- மூன்றாம் நிலை உற்பத்தி / வணிகம் கைத்தொழில்
  - வியாபாரம்
    - உள்நாட்டு வியாபாரம்
    - வெளிநாட்டு வியாபாரம்
  - துணைநிலைச் சேவைகள்
    - வங்கி
    - காப்புறுதி
    - தொடர்பாடல்
    - போக்குவரத்து
    - தொடர்பாடல்



வர்த்தகம் (Commerce)



வணிகம் (Business)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி

| பொருளதார நடவடிக்கைகள் | மொத்தத் தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு | |
|---|---|---|
| | **2016** | **2017** |
| **வேளாண்மை, காடாக்கம் மற்றும் மீன் பிடித்தல்** | **7.1** | **6.9** |
| தானியங்களின் வளர்ச்சி (அரசி நீங்கலாக) | 0.1 | 0.1 |
| அரிசியின் வளர்ச்சி | 0.6 | 0.5 |
| காய்கறிகளின் வளர்ச்சி | 0.6 | 0.5 |
| கரும்பு, புகையிலை, மற்றும் ஏனைய நீண்டகாலமல்லாத பயர்களின் வளர்ச்சி | 0.0 | 0.0 |
| பழவகைகளின் வளர்ச்சி | 0.5 | 0.5 |
| எண்ணெய் பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி (தேங்காய், செவ்விளநீர், கமுகு) | 0.7 | 0.6 |
| தேயிலையின் வளர்ச்சி (பச்சை இலைகள்) | 0.7 | 0.7 |
| ஏனைய குடிபானப்பயிர்களின் வளர்ச்சி (கோப்பி, கொக்கோ) | 0.0 | 0.0 |
| வாசணைத்திரவியங்கள், நறுமணப்பயிர்கள், மருந்து மற்றும் மருந்தாக்கப்பயிர்களின் வளர்ச்சி | 0.7 | 0.7 |
| இறப்பரின் வளர்ச்சி | 0.3 | 0.3 |
| ஏனைய நீண்டகாலப்பயிர்களின் வளர்ச்சி | 0.2 | 0.2 |
| விலங்கு உற்பத்தி | 0.6 | 0.6 |
| தாவர இனவிருத்தி மற்றும் வேளாண்மைக்கான துணை நடவடிக்கைகள் | 0.1 | 0.1 |
| காடாக்கலும் குத்திகளும் | 0.6 | 0.7 |
| மீன்பிடித்தல் | 1.3 | 1.3 |
| **கைத்தொழில்** | **26.6** | **26.8** |
| சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் | 2.4 | 2.5 |
| தயாரிப்பு | 15.5 | 15.7 |
| மின்சாரம், வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 1.0 | 1.0 |
| நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் | 0.1 | 0.1 |
| சாக்கடை, கழிவுப்பொருள் சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் நடவடிக்கைகள் | 0.3 | 0.3 |
| கட்டடவாக்கம் | 7.1 | 7.1 |

தொகுப்பு :
கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன் (த,தொ,தொ - ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி )
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

| பணிகள் | 56.7 | 56.8 |
|---|---|---|
| மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியம் மற்றும் தங்குமிடம் மற்றும் உணவுப்பணி நடவடிக்கைகள் | 23.1 | 22.9 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 0.6 | 0.6 |
| நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துரிமை உள்ளடங்களாக உண்மைச்சொத்துக்கள் நடவடிக்கைகள் | 12.9 | 13.4 |
| தொழில்சார்பணிகள் பணிகள் மற்றும் ஏனைய ஆளணி பணி நடவடிக்கைகள் | 11.5 | 11.5 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 8.7 | 8.3 |
| அடிப்படை விலையில் கூட்டப்பட்ட மொத்த பெறுமதிகளுக்கு சமமானவை | 90.4 | 90.4 |
| உற்பத்திகள் மீதான மானியங்கள் கழித்த வரி | 9.6 | 9.6 |
| சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமானவை | 100.0 | 100.0 |

## நிலையான விலைகளில் (2010) கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ)(இ)

| பொருளாதார நடவடிக்கை | மாற்ற வீதம் (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | | மொ.உ.உ இன் சதவீதமாக (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2016 (ஆ) | 2017 | 2016 (ஆ) | 2017 | 2016 (ஆ) | 2017 |
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்தல்** | -3.8 | -0.8 | -6.6 | -1.8 | 7.1 | 6.9 |
| தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக) | -12.2 | -10.3 | -0.5 | -0.5 | 0.1 | 0.1 |
| அரிசியின் வளர்ச்சி | -31.3 | -4.0 | -6.2 | -0.8 | 0.6 | 0.5 |
| காய்கறிகளின் வளர்ச்சி | 3.5 | -16.2 | 0.5 | -3.4 | 0.6 | 0.5 |
| கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய நீண்ட காலமல்லாத பயிர்களின் வளர்ச்சி | 15.2 | -14.1 | 0.1 | -0.1 | 0.0 | 0.0 |
| பழவகைகளின் வளர்ச்சி | -3.2 | 7.4 | -0.4 | 1.2 | 0.5 | 0.5 |
| எண்ணெய்ப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி (தேங்காய், செவ்விளநீர், கமுகு) | -0.8 | -19.5 | -0.1 | -4.6 | 0.7 | 0.6 |
| தேயிலையின் வளர்ச்சி (பச்சை இலைகள்) | -11.2 | 4.8 | -2.1 | 1.1 | 0.7 | 0.7 |
| ஏனைய குடிபானப் பயிர்களின் வளர்ச்சி (கொப்பி, கொக்கோ போன்றவை) | 7.5 | -6.4 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| வாசனைத்திரவியங்கள், நறுமணப்பயிர்கள், மருந்து மற்றும் மருந்தாக்க பயிர்களின் வளர்ச்சி | 2.3 | 0.5 | 0.4 | 0.1 | 0.7 | 0.7 |
| இறப்பரின் வளர்ச்சி | -10.7 | 4.9 | -0.7 | 0.4 | 0.3 | 0.3 |
| ஏனைய நீண்டகாலப் பயிர்களின் வளர்ச்சி | -2.1 | 1.5 | -0.1 | 0.1 | 0.2 | 0.2 |
| விலங்கு உற்பத்தி | 7.3 | 3.9 | 1.0 | 0.8 | 0.6 | 0.6 |
| தாவர இனவிருத்தி மற்றும் வேளாண்மைக்கான துணை நடவடிக்கைகள் | -2.0 | 0.4 | -0.1 | 0.0 | 0.1 | 0.1 |
| காடாக்கலும் குத்திகளும் | 8.9 | 22.0 | 1.1 | 4.1 | 0.6 | 0.7 |
| மீன்பிடித்தல் | 1.6 | -0.5 | 0.5 | -0.2 | 1.3 | 1.3 |
| **கைத்தொழில்** | 5.8 | 3.9 | 34.0 | 33.1 | 26.6 | 26.8 |
| சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் | 14.4 | 5.9 | 7.1 | 4.6 | 2.4 | 2.5 |
| தயாரிப்பு | 3.2 | 3.9 | 11.1 | 19.6 | 15.5 | 15.7 |
| மின்சாரம், வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 8.4 | 2.7 | 1.8 | 0.9 | 1.0 | 1.0 |
| நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் | 7.9 | 4.6 | 0.2 | 0.2 | 0.1 | 0.1 |
| சாக்கடை, கழிவுப்பொருள் சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் நடவடிக்கைகள் | 17.8 | 7.9 | 1.0 | 0.7 | 0.3 | 0.3 |
| கட்டடவாக்கம் | 8.3 | 3.1 | 12.7 | 7.0 | 7.1 | 7.1 |
| **பணிகள்** | 4.7 | 3.2 | 59.3 | 58.8 | 56.7 | 56.8 |
| மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியம் மற்றும் தங்குமிடம் மற்றும் உணவுப்பணி நடவடிக்கைகள் | 4.0 | 2.5 | 20.8 | 18.8 | 23.1 | 22.9 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 8.0 | 10.2 | 1.0 | 1.9 | 0.6 | 0.6 |
| நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துரிமை உள்ளடங்களாக உண்மைச் சொத்துக்கள் நடவடிக்கைகள் | 9.2 | 7.0 | 25.5 | 29.0 | 12.9 | 13.4 |
| தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய ஆளணி பணி நடவடிக்கைகள் | 0.9 | 3.3 | 2.5 | 12.4 | 11.5 | 11.5 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனிதநலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 4.9 | -1.2 | 9.5 | -3.3 | 8.7 | 8.3 |
| **அடிப்படை விலையில் கூட்டப்பட்ட மொத்த பெறுமதிகளுக்கு சமனானவை** | 4.3 | 3.1 | 86.8 | 90.1 | 90.4 | 90.4 |
| உற்பத்திகள் மீதான மானியங்கள் கழித்த வரி | 6.3 | 3.2 | 13.2 | 9.9 | 9.6 | 9.6 |
| **சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமனானவை** | 4.5 | 3.1 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | -11.4 | -5.3 | | | | |
| **சந்தை விலையிலான மொத்த தேசிய வருமானம்** | 4.3 | 3.1 | | | | |

தொகுப்பு :

கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன் (த,தொ,தொ - ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## உற்பத்திச் சங்கிலி (Production Chain)

முதலாம் நிலை உற்பத்தி, இரண்டாம் நிலை உற்பத்தி, மூன்றாம் நிலை உற்பத்தி என்பவற்றுக்கிடையிலான தொடர்பு அல்லது இணைப்பு (Link) உற்பத்திச் சங்கிலி எனப்படும்.

உற்பத்திச் சேர்க்கையொன்றை பழவகை உற்பத்தியை பழச்சாறாக்கி போத்தலில் (Fruit Juice) அடைத்தல் தொடர்பிலான உற்பத்திச் சங்கிலியை பின்வருமாறு வரைபடமாக காட்ட முடியும்.

| | | |
|---|---|---|
| முதல் நிலை உற்பத்தி | = | பண்ணைகளில் பழவகை உற்பத்தி செய்தல் |
| ↓ | | ↓ |
| இரண்டாம் நிலை உற்பத்தி | = | பழச்சாற்றினை போத்தலில் அடைத்தல் |
| ↓ | | ↓ |
| மூன்றாம் நிலை உற்பத்தி | = | போத்தலில் அடைக்கப்பட்ட பழச்சாறினை நுகர்வோருக்கு விநியோகித்தல் |

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## செயற்பாடு 1

குறிப்பிட்ட ஒரு வணிகத்தை பல்வேறு முறைகளில் வகைப்படுத்த முடியும். அந்த வகையில் உமது பிரதேசத்தில் செயற்படுகின்ற ஐந்து வணிகங்களை தெரிவு செய்து அவற்றினை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு வகைப்படுத்திக் காட்டுக

| வணிகத்தின் பெயர் | உற்பத்தியின் தன்மைக்கேற்ப | | | உரிமையின் அடிப்படையில் | | நோக்கத்தின் அடிப்படையில் | | பருமனின் அடிப்படையில் | | உற்பத்தித் துறையின் அடிப்படையில் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | முதலாம் நிலை | இரண்டாம் நிலை | மூன்றாம் நிலை | தனியார்துறை | பொதுத்துறை | இலாபநோக்கம் | இலாபநோக்கற்ற | சிறிய / நடுத்தரளவு | பாரியளவு | விவசாயம் | கைத்தொழில் | சேவை |
| | | | | | | | | | | | | |

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## செயற்பாடு 2

* அண்மிய ஆண்டின் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் மொத்த தேசிய உற்பத்தியின் வகைப்படுத்தலை பரிசீலிக்குக
* மொத்த தேசிய உற்பத்திக்கு ஒவ்வொரு துறையும் பங்களிப்புச்செய்கின்ற முறையினை வீத அடிப்படையில் முன்வைக்க (அண்மைய வருடத்தின் மத்திய வங்கியின் ஆண்டறிக்கையினை ஆய்வு செய்க)

## செயற்பாடு 3

**இலங்கையில் காணப்படும் வணிகங்கள் சில கீழே தரப்படுகின்றன**

* சுரங்கமறுத்தலும் கனிய அகழ்வும்
* மின்சாரம், வாயு, வெப்பம் மற்றும் குளிரூட்டல் வழங்கல்
* தகவல் தொடர்பாடல் நடவடிக்கைகள்
* நிதி காப்புறுதி மற்றும் வீட்டுரிமையும், ஆதன வியாபாரமும்
* விவசாயம், கால்நடை, காட்டு வளம், மீன் பிடித்தொழில்
* நிர்மாணக் கைத்தொழில்
* தொழில்சார் சேவைகள் மற்றும் ஏனைய தனியார் சேவைகள்
* நீர் சுத்திகரிப்பும் விநியோகமும்
* உற்பத்திக்கைத்தொழில்
* வியாபாரம், போக்குவரத்து சேவை, விடுதி வசதி வழங்கல், உணவு குடிபானம் வழங்கல்
* மலமகற்றும் நடவடிக்கைகள், கழிவகற்றல் முகாமைத்துவமும் அப்பொருள்களை மீள் சுழற்சி பயன்பாட்டிற்குட்படுத்தலும்
* மேலே குறிப்பிட்டவற்றை பின்வரும் தலைப்புக்களின் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக

1) (அ) முதலாம் நிலை வணிகம்
   (ஆ) இரண்டாம் நிலை வணிகம்
   (இ) மூன்றாம் நிலை வணிகம்

2. (அ) விவசாயத்துறை
   (ஆ) கைத்தொழில் துறை
   (இ) சேவைத்துறை

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



1. உற்பத்தியின் தன்மையின் அடிப்படையில் வணிகங்களை 1) ......................... 2) ...................... 3) ...............................என வகைப்படுத்தலாம்
2. பருமனின் அடிப்படையில் 1) .......................... 2) .......................... என வணிகத்தினை வகைப்படுத்தலாம்
3. இயற்கையின் அருங்கொடையாக கிடைக்கப்பெற்றவைகளை அவற்றில் எவ்வித மாற்றமும் செய்யாது அம்முறையிலேயே பயன்பாட்டுக்கு உட்படுத்தும் உற்பத்தி .................. வணிகம் என அழைக்கப்படும்
4. உற்பத்திக் கைத்தொழில், நிர்மாணக் கைத்தொழில் என்பன ..................வணிகம் எனப்படும்
5. ..................... அடிப்படையில் வணிகங்களை தனியார் துறை வணிகம், பொதுத்துறை வணிகம் என வகைப்படுத்த முடியும்

சுருக்கமான விடை தருக?

1. வணிகங்களை வகைப்படுத்துவதற்கான நியதிகளைத் தருக?
2. வணிகங்களின் வகைப்படுத்தலின் அடிப்படைகளையும் அதற்கேற்ப அவை வகைப்படுத்தப்படுகின்ற முறைகளையும் பாய்ச்சல் கோட்டு வரைபடம் மூலம் காட்டுக



விடை

1)முதலாம்நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை

2)சிறிய நடுத்தர அளவு, பாரிய அளவு

3)முதல் நிலை

4)இரண்டாம் நிலை

5)உரிமையின்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk